செங்கற்பட்டு தாலுகா, குன்றத்தூர், லால்குடி, சிதம்பரம் தாலுகா ஸ்ரீவைகுண்டம், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், மாயூரம் ஆகிய இடங்களில் உள்ளன. கதர் போர்டு கீழ் உள்ள தொழிற்சாலை விவரங்கள் தனிக் கேள்வி போட்டால் தெரியும்.

Deputy Inspectors and District Educational Officers

*163. *Q*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of Assistant Professors of Government Training Colleges posted as Deputy Inspectors in 1966 ; and

(*b*) the number of such Deputy Inspectors promoted as District Educational Officers ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) 5.

(இ) இல்லை.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, may I know the reason for not giving them the District Educational Officers' posts in spite of the training for one year ?

மாண்புமிகு திரு. வி, ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஐந்து பேர் டெபுடி இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டு பயிற்சி பெறும் நிலைமையில் இருக்கிறார்கள். டி.இ.ஓ. ப்ரமோஷன் 1967-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டவர்களுக்கு வராததால் அவர்களுக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. மேலும் அவர்களில் இரண்டுபேர் உதவி பேராசிரியர்களாகவே திரும்பவும் கல்லூரிக்கு வந்துவிட்டார்கள். மூன்று பேர் பயிற்சி பெறும் நிலைமையில் இருக்கிறார்கள். 1966 எப்ரல் 1-ந்தேதிக்கு முன்னால் அவர்களுக்கு ரூ. 225-10-275-15-350 என்ற அளவுக்கு சம்பள விகிதம் இருந்தது. யு.ஜி.சி. ஸ்கேலுக்குப் பிறகு ரூ. 300-25-600 என்று ஆயிற்று. இப்போது பேராசிரியர்களுக்கு ரூ. 400-30-640-40-800 வரையில் போவதால், மற்ற டி.இ.ஓ. வுக்கு 300-25-800 இருப்பதால், பெரும்பாலோர் பேராசிரியர்களாக வருவதை மேலானதாகக் கருதுகிறார்கள். பயிற்சி பெறும் நிலையில்தான் மற்ற மூன்று பேரும் இருக்கிறார்கள்.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, would Government reserve the future vacancies for them if they apply for such posts ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மறுபடியும் பயிற்சி பெற்று அந்த டி.இ.ஓ. வாக வருவதற்கு விரும்பினால் அதற்கான காலி இடம் ஏற்பட்டால் கவனிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : ஐந்து சாதாரண பேராசிரியர்கள் ரூ. 300 ஆரம்ப சம்பளத்திலிருந்து துணை ஆய்வாளராக ரூ. 140-250 என்ற சம்பளத்திற்கு இறக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ? அதனால் பி.எ.பி.டி. படித்துள்ள துணை ஆய்வாளர்கள் சம்பளத்தில் பாதிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்கள் இருந்த பதவியிலிருந்து இறக்கப்பட்டதாகக் குறிப்புகள் இல்லை. உதவிப் பேராசிரியராக இருந்து பயிற்சி பெறுவதற்குச் சென்றார்கள் என்றும் இரண்டு பேர்கள் கல்லூரிக்கு வந்துவிட்டார்கள் என்றும் மற்ற மூன்று பேரும் பயிற்சி பெறும் நிலையில் இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. டி.இ.ஓ. வாக நியமிப்பதற்கு ஏற்ற வாய்ப்பு இடம் காலியாக இல்லாததால் அவர்கள் அதிலேயே இருக்கிறார்கள். இப்போது உதவி பேராசிரியரிலிருந்து பேரா-

சிரியராகப் போவது அதிகப் பலன் தருகிறது என்ற அளவில் டி.இ.ஓ. வாகப் போவதைவிட பேராசிரியாராகப் போவது தங்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடுமென்று கருதுகிருர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, புதிய அமைச்சர்கள் பதவி ஏற்றவுடன் டி.இ.ஓ. கிரேடில் ஆளும் கட்சிக்கு வேண்டிய யாரேனும் தகுதியற்ற நிலையில் நியமிக்கப்பட்டிருக்கிருரா?

மாண்புமிகு திரு. வி, ஆர். நெடுஞ்செழியன் : பொதுப்படையாகக் கேட்டால், எந்த பதிலும் சொல்வதற்கில்லை. குறிப்பிட்டு இந்த இடத்தில் இன்னர் என்று சொன்னல், அதை ஆராய்ந்து பதில் சொல்ல முடியும்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : உதவி பேராசிரியர் பேராசிரியராக நியமிக்கப்படுவதற்கு கடந்த காலத்தில் 10 (ஏ) 1 என்ற தற்காலிக சர்வீஸ் இருந்தால் அதையும் சேர்த்துக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. வி, ஆர். நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் ஆராய்ந்து சொல்லலாம்.

Pesticides

*164 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the price of pesticides distributed to the ryots of Tamilnad, was increased recently ;

(*b*) the reason therefor ; and

(*c*) the price that prevailed before and after the rise in prices ?

பூச்சி கொல்லி மருந்துகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்து விலை அண்மையில் கூட்டப்பட்டதா ?

(இ) இதற்கான காரணம் என்ன ?

(உ) விலை ஏற்றுவதற்கு முன்பும், பின்பும் இருந்த விலை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பூச்சிக் கொல்லி மருந்துகளின் விலைகளை அரசாங்கம் வரையறுப்பதில்லை. அவ்விலைகளை அம் மருந்து தயாரிப்பாளர்களும் வணிகர்களும் முடிவு செய்கின்றனர். பூச்சிக் கொல்லி மருந்துகள் சிலவற்றின் விலை கடந்த ஓராண்டில் கூடியுள்ளது. சிலவற்றில் விலை குறைந்துள்ளது.

(இ) தகவல் எதுமில்லை,